விஜயபாரதம்
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, புரட்டாசி - 3 ஞாயிறு 19.09.2021 மலர் - 2, இதழ் - 166


# புதிய ஆளுனருக்கு வாழ்த்துகள்

தமிழகத்தின் புதிய ஆளுனராக பொறுப்பேற்ற பின் தமிழில் வணக்கம் கூறி பத்திரிகையாளர்களிடம் பேசிய ஆளுனர் ஆர். என். ரவி, 'பாரம்பரியமிக்க கலாசாரம் கொண்ட தமிழகத்தின் ஆளுனராக பொறுப்பேற்பது மகிழ்ச்சியும் பெருமையும் அளிக்கிறது. தமிழக மக்கள், அரசின் முன்னேற்றத்திற்காக உழைப்பேன். தமிழ் மொழியை கற்பேன், சிறிது காலம் பத்திரிகையாளராக பணியாற்றியுள்ளேன். தமிழக அரசுக்கு முழு ஒத்துழைப்பையும் வழங்கி, மத்திய மாநில அரசுகளுக்கு இடையே பாலமாக செயல்படுவேன். அரசியல் அமைப்பு அதிகாரத்திற்கு உட்பட்டு எனது பணிகள் இருக்கும். தமிழக அரசு கொரோனாவை சிறப்பாக எதிர்கொண்டதுடன் கட்டுப்படுத்தியும் உள்ளது. தமிழக அரசின் ஒட்டு மொத்த செயல்பாடு குறித்து இப்போதைக்கு எதுவும் சொல்ல முடியாது' என்று கூறினார்.



விஜயபாரதம்

# இதுதான் தி.மு.க.வின் மதசார்பின்மை




விஜயபாரதம்

குலசேகரன் பட்டிணம் முத்தாரம்மன் கோயில் தசரா திருவிழா வெகு விமர்சையாக நடக்கும். மைசூருக்கு அடுத்தபடியாக இங்குதான் இவ்விழா பிரம்மாண்டமாக நடக்கும். இவ்விழா இந்த வருடம் கொரோனாவை காரணம் காட்டி பக்தர்களுக்கு அனுமதி இன்றி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அதே போல புரட்டாசி சனிக்கிழமைகளில் நவதிருப்பதி கோயில்களிலும் பக்தர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டு உள்ளது. சதுரகிரியிலும் 4 நாட்கள் பக்தர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டு உள்ளது. ஆனால், சாத்தான் குளம், சொக்கன்குடி மணல் மாதா தேவாலயத்தில் செப்டம்பர் 17ல் கொடியேற்றத்துடன் கிறிஸ்தவர்கள் ஏராளமானோர் பங்கேற்க திருவிழா துவங்கி நடைபெறுகிறது. தைலாபுரம் உபகார அன்னை தேவாலய திருவிழா நேற்று துவங்கி 10 நாட்கள் கிறிஸ்தவர்கள் பங்கேற்புடன் நடக்கிறது.

# மின் வாரியத்திற்கு அறிவுறுத்தல்

மத்திய மின் துறை உயரதிகாரிகள், மின்சார வாகன சார்ஜிங் மையம் அமைக்கும் பணிகள் தொடர்பாக, தமிழக மின் வாரியம் உட்பட பல மாநில அதிகாரிகளுடன் இணையம் வாயிலாக ஆய்வு மேற்கொண்டனர். அதில், அடுத்த இரண்டு ஆண்டுகளில் மின்சார வாகன பயன்பாட்டை அதிகரிக்க ஏதுவாக, தேசிய நெடுஞ்சாலைகளில் 25 கி.மீ துாரத்துக்கு ஒரு வாகன சார்ஜிங் மையமும்; மாநகராட்சி பகுதிகளில் 3 கி.மீ துாரத்திற்கு ஒரு சார்ஜிங் மையமும் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்' என அறிவுறுத்தினர்.



விஜயபாரதம்

# ஐயப்ப சேவா சமாஜ அலுவலகம்

கடந்த 16. 9. 2021 அன்று காலை 9.00 மணி அளவில் சென்னை விருகம்பாக்கத்தில் சபரிமலை ஐயப்ப சேவா சமாஜத்தின் மாநில ஆலுவலகம் திறக்கப்பட்டது.



விஜயபாரதம்

# மின்னணு சந்தைப் பயிற்சி

MSME
MICRO, SMALL & MEDIUM ENTERPRISES

விஜயபாரதம்

மத்திய அரசின் எம்.எஸ்.எம்.இ தொழில்நுட்ப மேம்பாட்டு மையம் சார்பில், மின்னணு சந்தை குறித்த பயிற்சி வகுப்புகள், செப்டம்பர் 25, 25 மற்றும் அக்டோபர் 2, 3ம் தேதிகளில் பிற்பகல் 2 மணி முதல் மாலை 6 மணி வரை நடத்தப்பட உள்ளன. இப்பயிற்சியில் அரசு ஆன்லைன் போர்டல் மூலம் விண்ணப்பித்து, அரசின் ஆர்டர்களை பெறுவது, பல்வேறு அரசுத் துறைகள், பொதுத்துறை நிறுவனங்கள் ஆகியவற்றில் பொருட்களை விற்பனை செய்வது, சேவைகள் வழங்குவது உள்ளிட்ட பயிற்சிகள் அளிக்கப்படும். வேலை தேடுபவர்கள், தொழில்முனைவோர், வணிக உரிமையாளர்கள், சிறு, குறு, நடுத்தர உற்பத்தி நிறுவனங்கள், கணக்கு, நிதித்துறை நிபுணர்கள், ஏற்றுமதி இறக்குமதி நிறுவனங்கள், விற்பனைப் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் இப்பயிற்சியில் கலந்துகொள்ளலாம். பயிற்சிக் கட்டணம் ரூ. 4,720. இப்பயிற்சி குறித்த கூடுதல் விவரங்களுக்கு 7305168118, 95000 34831, 91595 87689 ஆகிய அலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

# சுருளி ஹிந்தி




விஜயபாரதம்

கேரளாவில் உள்ள மாணவர்களுக்கு ஹிந்தி கற்றலை கவர்ச்சிகரமானதாகவும் எளிதாகவும் ஆக்க 'சுருளி ஹிந்தி' என்ற புதிய வழிமுறையை கேரள அரசு ஏற்படுத்தி உள்ளது. கேரள கல்வி அமைச்சர் வி. சிவன்குட்டி இந்த முயற்சியைத் தொடங்கி வைத்து பேசுகையில், இந்த புதிய பதிப்பில் டிஜிட்டல் அனிமேஷன், பொம்மலாட்டம், கியு.ஆர் கோடுகள் உள்ளிட்ட நவீன முறைகள் பின்பற்றப்படும். இந்த முயற்சியை செயல்படுத்த 'சமக்ரா ஷிக்ஷா கேரளா' பொறுப்பேற்றுள்ளது. இந்த டிஜிட்டல் கல்வி முறை அனைத்தும் கேரளாவின் கல்வி மேற்பார்வை (SCERT) அமைப்பின் கீழ் பணிபுரியும் தகுதிவாய்ந்த ஆசிரியர்களின் குழுவால் உருவாக்கப்பட்டது என தெரிவித்துள்ளார். ஹிந்தியை எதிர்த்து அரசியல் செய்தே பழகிவிட்ட இங்குள்ள கம்யூனிஸ்ட்டு கட்சிகளும் அவர்களது கூட்டணியான தி.மு.க, வி.சி.க போன்றோரும் இதற்கு என்ன சொல்லப்போகிறார்கள்?

# அமைப்புசாரா தொழிலாளர் பதிவு

பாரதத்தில் 43.7 கோடிக்கும் அதிகமான அமைப்புசாரா தொழிலாளர்கள் உள்ளனர். அவர்களை கண்டறிந்து, நலத்திட்டங்கள், வேலைவாய்ப்பை உருவாக்க, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம், 'இஷ்ரம்' என்ற இணைய பதிவு முறையை துவங்கி உள்ளது. மத்திய அரசின் அனைத்து பொது சேவை மையங்களிலும், இதற்கான பதிவுகளை செய்யலாம். தேவையான விவரங்களை பதிவேற்றம் செய்த பின், பயனாளியருக்கு 12 இலக்க யு.ஏ.என்., வழங்கப்படும். அரசின் சலுகைகள் அவர்களின் வங்கி கணக்கில் நேரடியாக அரசால் வழங்கப்படும். இந்த தரவு தளம், தொழிலாளர்களின் தொழில் திறமையை வகைப்படுத்த, திறமைக்கு ஏற்ற வேலை வாய்ப்புகளை உருவாக்க உதவும். தொழிலாளர்கள் புலம்பெயர நேர்ந்தாலும் யு.ஏ.என் என்ற பிரத்தியேக எண் மூலம் சலுகைகள் கிடைக்கும். இதில் பதிவு செய்ய எந்த கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை. அமைப்புசாரா தொழிலாளர்களின் விவரங்கள் பதிவேற்றத்தை வரும் டிசம்பர் 31க்குள் முடிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது.

விஜயபாரதம்

e-Shram

Shramev Jayate

NATIONAL DATABASE OF UNORGANISED WORKERS




விஜயபாரதம்

# மோடிக்கு ராகுல் மாற்று அல்ல

அடுத்த லோக்சபா தேர்தலில் மத்தியில் ஆட்சி அமைப்பதில் எதிர்க்கட்சிகள் மும்முரம் காட்டி வருகின்றன. எதிர்க்கட்சிகளை கூட்டணியில் இணைக்கும் முயற்சியில் பல்வேறு எதிர்கட்சித் தலைவர்கள் ஈடுபட்டுள்ளனர். அதில் மேற்கு வங்க முதல்வரும், திருணமுல் காங்கிரஸ் கட்சித் தலைவருமான மமதா பானர்ஜியும் ஒருவர். சமீபத்தில் மேற்கு வங்க தலைநகர் கொல்கத்தாவில் திரிணமுல் காங்கிரஸ் கட்சியின் ஆலோசனை கூட்டம் நடந்தது. இதில், அக்கட்சியின் மூத்த தலைவரும், எம்.பியுமான சுதீப் பந்தோபாத்யாய் பேசுகையில், 'காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி வைக்கக் கூடாது என நாங்கள் கூறவில்லை. நீண்ட காலமாக நான் ராகுலை கண்காணித்து வருகிறேன். தன்னை ஒரு தலைவராக அவர் வளர்த்து கொள்ளவில்லை. மோடிக்கு மாற்றாக அவர் எவ்வகையிலும் உருவெடுக்கவில்லை. இந்த நாடு மமதாவை மோடிக்கு மாற்றாக கருதுகிறது என்று பேசினார். மெகா கூட்டணி வைக்கலாம், ராகுலை பிரதமர் ஆக்கலாம் என்ற கனவில் உள்ள சோனியா கந்தி உட்பட காங்கிரஸ் கட்சியினரிடையே இக்கருத்து சர்ச்சையையும் விரக்தியையும் ஏற்படுத்தி உள்ளது.

---


விஜயபாரதம்

# சோனுசூட் வரி ஏய்ப்பு

பாலிவுட் நடிகர் சோனு சூட்டிற்கு சொந்தமான இடங்களிலும், லக்னோவை சேர்ந்த நிறுவனம் ஒன்றுக்கு சொந்தமான இடங்களிலும் வருமான வரித்துறை சோதனை நடத்தியது. மும்பை, லக்னோ, கான்பூர், ஜெய்ப்பூர், டில்லி, குருகிராமில் உள்ள இடங்களில் சோதனை நடத்தப்பட்டது. ரியல் எஸ்டேட்' தொழில் ஆவணங்கள் அடிப்படையில் இந்த சோதனை நடைபெற்றதாக வருமான வரித்துறை அதிகாரிகள் கூறியுள்ளனர். இந்த சோதனையின் போது, அவரும் அவரது நண்பர்களும் இணைந்து வரி ஏய்ப்பு செய்ததற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. இதுவரை 20 கோடிக்கும் அதிகமாக வரி ஏய்ப்பு செய்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சோனுசூட் போலியான நிறுவனங்களிடம் இருந்து போலியாக கடன் வாங்கி கணக்கில் வராத பல சொத்துகள் சேர்த்து உள்ளார் என கூறப்பட்டுள்ளது.

# பெரிய சூரிய மின்னுற்பத்தி நிலையம்



விஜயபாரதம்

நாட்டிலேயே மிகப் பெரிய மிதக்கும் சூரிய மின்னுற்பத்தி நிலையத்தை பொதுத் துறை நிறுவனமான தேசிய அனல் மின் கழகம் நிறுவியுள்ளது. இது 25 மெகாவாட் மின்னுற்பத்தி செய்யும் திறன் கொண்டது. 100 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள இந்த ஆலையின் செயல்பாடு சமீபத்தில் துவக்கி வைக்கப்பட்டது. பொதுத்துறை நிறுவமான பாரத மிகு மின் நிறுவனம் (பி.ஹெச்.இ.எல்) இதை நிறுவியுள்ளது. ஆந்திர மாநிலம் சிம்ஹாத்ரி அணைக்கட்டு பகுதியில் நிறுவப்பட்டுள்ள இந்த மிதக்கும் சூரிய மின்னுற்பத்தி பேனல்களால் தண்ணீர் ஆவியாவது தடுக்கப்படும். சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் மின்னுற்பத்தியும் செய்யப்படும்.

# ரயில்வே தொழில்நுட்ப பயிற்சி



விஜயபாரதம்

சுதந்திர தினத்தின் 75ம் ஆண்டு கொண்டாட்டத்தை ஒட்டி, ரயில்வே துறை சார்பில், திறன் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 18 முதல் 35 வயது வரையிலான 50 ஆயிரம் இளைஞர்களுக்கு தொழில்நுட்ப பயிற்சி அளிக்கும் திட்டத்தை, ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் டெல்லியில் துவக்கி வைத்தார். எலக்ட்ரீஷியன், வெல்டர், பிட்டர், மெக்கானிக் என, நான்கு வகைகளில் பயிற்சி அளிக்கப்படும். நாடு முழுதும் உள்ள 75 ரயில்வே பயிற்சி மையங்களில் முதற்கட்டமாக 1,000 பேருக்கு இப்பயிற்சி அளிக்கப்படும். ரயில்வே மையங்கள் வாயிலாகவே மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். இப்பயிற்சி பெற்றவர்கள் ரயில்வேயில் வேலை கோர உரிமை கிடையாது. பயிற்சி முடிவில் ரயில், போக்குவரத்து மையத்தின் சார்பில் சான்றிதழ் வழங்கப்படும்.

# நெடுஞ்சாலைத்துறை புதிய முயற்சி

டெல்லி ஜெய்ப்பூர் நெடுஞ்சாலை மின்சார நெடுஞ் சாலையாக ஒரு புதிய மாற்றத்தை பெற உள்ளது. அதற்கான ஆய்வுகள் விவாதங்கள் நடைபெற்று வருகின்றன. அச்சாலைகளில் செல்லும் பேருந்துகளும், லாரிகளும் ரயில்வே என்ஜின்கள் போன்று மின்சாரத்தால் இயக்கப்படும். இந்த மின்சார நெடுஞ்சாலையை அமைக்க வெளிநாட்டு நிறுவனம் ஒன்றுடன் நெடுஞ்சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சகம் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. டெல்லியில் இருந்து ஜெய்ப்பூருக்கு மின்சார நெடுஞ்சாலை அமைப்பது எனது கனவு திட்டம் என மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சர் நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.



விஜயபாரதம்

# நிதி ஆயோக் பரிந்துரை




விஜயபாரதம்

பாரதத்தின் நகர்ப்புற திட்டமிடல் திறன் சீர்திருத்தங்கள் அறிக்கையை நிடி ஆயோக் வெளியிட்டுள்ளது. நாட்டின் தற்போதைய நகர்ப்புற நிர்வாகத்தை சீரமைக்க பல்வேறு நிலைகளில் 10 குறிப்பிட்ட கொள்கை முடிவுகளை எடுக்க அக்குழு பரிந்துரைத்துள்ளது. அதன்படி, உலகின் மொத்த நகர்ப்புற மக்கள் தொகையில் பாரதம் தற்போது 11 சதவிகிதம் என்ற அளவில் உள்ளது. இது மிகவும் வளர்ந்த நாடுகளை விட அதிகமாகும். வரும் 2036ம் ஆண்டு வாக்கில் நகர்ப்புற மக்கள்தொகை வளர்ச்சி என்பது 73 சதவீதம் அதிகரிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நகர்புற நிர்வாகம் என்பது முக்கியமான அம்சமாக இருந்தாலும், நகர்ப்புற திட்டமிடல் என்பது அதன் வளர்ச்சியின் வேகத்திற்கேற்ப முக்கியத்துவம் கொடுக்கப்படாமல் உள்ளது. எனவே, நகர்ப்புற திட்டமிடல் நிர்வாக அமைப்பை மேம்படுத்தவும் நகர்ப்புற திட்டமிடல் நிறுவனங்களை முறைப்படுத்தவும் வேண்டும். அனைத்துத் துறைகளையும் ஒருங்கிணைத்து ஒரு முழுமையான நகர்ப்புற திட்டமிடல் தற்போது அவசியம் என அந்தஅறிக்கை பரிந்துரைத்துள்ளது.

# காஷ்மீர் பண்டிட் மீள்குடியேற்றம்



விஜயபாரதம்

சட்டப்பிரிவு 370 நீக்கத்திற்குப் பிறகு காஷ்மீரில் இருந்து வெளியேற்றப்பட்ட பல்லாயிரம் காஷ்மீர் பண்டிட் குடும்பங்களில் முதற்கட்டமாக 360 குடும்பங்கள் மீண்டும் தங்கள் சொந்த மாநிலத்துக்கு திரும்ப உள்ளனர். இவர்களுக்கு மறுவாழ்வு அளிக்க மத்திய அரசு தற்போது பல்வேறு ஏற்பாடுகள் செய்து வருகிறது. அதன்படி, 40 கோடி ரூபாய் மதிப்பில் காஷ்மீர் பண்டிட் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை சீரமைக்க புதிய முகாம்கள் உருவாக்கப்படும் என்று மத்திய அமைச்சர் சர்பந்தா சோனோவால் தெரிவித்துள்ளார்.

# சரணடைந்த பயங்கரவாதி



விஜயபாரதம்

டெல்லியில் சில நாட்களுக்கு முன் பாகிஸ்தானில் பயிற்சி பெற்ற ஆறு பயங்கரவாதிகள் கைது செய்யப்பட்டனர். அவர்களில்லில் ஒருவனான பயங்கரவாதி ஒசாமாவின் மாமா ஹேமுத் ரஹ்மான், உத்தர பிரதேசத்தின் பிரயாக்ராஜில் காவல்துறையிடம் சரணடைந்தார். டெல்லி காவல்துறை, ‘ரெஹ்மான் பாகிஸ்தானால் ஏற்பாடு செய்து தரப்பட்ட வெடிகுண்டு உள்ளிட்ட பயங்கரவாத பொருட்களை மேம்படுத்துவது, வெடிபொருட்களை கொண்டு செல்வதில் உதவி செய்வது போன்ற பணிகளை செய்து வந்தார். இவர்கள் நாடு முழுவதும் கொலைகள், குண்டுவெடிப்புகளை நடத்த திட்டமிட்டு இருந்தனர். மும்பை குண்டுவெடிப்புகளைப் போன்று, நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வரவிருக்கும் பண்டிகைக் காலங்களில் வெடிகுண்டுகளை வைக்கும் நோக்கில் செயல்பட்டனர்’ என தெரிவித்துள்ளது.

# கோவேக்ஸின் ஒப்புதல் தாமதம்



விஜயபாரதம்

உலக சுகாதார அமைப்பின் (WHO) அவசரகால பயன்பாட்டு அங்கீகாரத்திற்காக பாரத் பயோடெக்கின் கொரோனா தடுப்பூசியான கோவாக்ஸின் அக்டோபர் 5 வரை காத்திருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. உலக சுகாதார அமைப்பை சேர்ந்த தடுப்பூசி நிபுணர்களின் உயர்மட்ட ஆலோசனைக் குழு (SAGE) கோவாக்சின் தடுப்பூசியின் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை மருத்துவ பரிசோதனைகளின் தரவுகளை தற்போது பகுப்பாய்வு செய்து வருகிறது. இதற்கான அங்கீகாரத்தை வழங்குவது குறித்து முடிவு செய்ய அக்டோபர் 5 ஆம் தேதி கூடுகிறது என கூறப்பட்டுள்ளது. கோவாக்ஸின் தான் பாரதத்தில் முதன்முதலாக உள்நாட்டில் உருவாக்கப்பட்ட கொரோனா தடுப்பூசி. இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் (ஐ.சி.எம்.ஆர்), புனேவில் உள்ள தேசிய வைராலஜி நிறுவனம் ஆகியவற்றுடன் பாரத் பயோடெக் இணைந்து இதனை உருவாக்கியது என்பது குறிப்பிடத்தக்கது.

# தவறாக நடந்தால் தர்ம அடி



விஜயபாரதம்

மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜியின் தலைக்கு ரூ. 11 லட்சம் பரிசு வழங்குவேன் என கடந்த 2017ல் கூறியதாக குற்றம் சாட்டப்பட்ட வழக்கில் பாரதிய ஜனதா யுவ மோர்ச்சாவின் தலைவர் யோகேஷ் வர்ஷ்னியை கைது செய்ய மேற்கு வங்கத்தைச் சேர்ந்த சி.ஐ.டி காவல்துறையினர் குழு செப்டம்பர் 17ல் உத்தரபிரதேசத்தில் உள்ள அலிகர் மாவட்டம் சென்றது. வீட்டில் அவர் இல்லாததால், வீட்டை சோதனையிடுவதாகக் கூறி அவர் வீட்டின் பெண்களிடம் தவறாக நடக்க முயற்சித்தனர் அந்த காவல்துறையினர். விவரம் அறிந்து அங்கு வந்த பாரதிய ஜனதா யுவ மோர்ச்சா தொண்டர்கள் அந்த 4 காவல் அதிகாரிகளையும் வீட்டில் அடைத்து வைத்து தாக்கியுள்ளனர். பின்னர் உ.பி காவல்துறையினர் வந்து அவர்களை மீட்டுச் சென்றனர்.

# கேரள தங்கக் கடத்தல் வழக்கு



விஜயபாரதம்

கேரள தங்கக் கடத்தல் வழக்கை விசாரித்து வரும் அமலாக்கத்துறை இயக்குநரகம், அவ்வழக்கில் சம்பந்தப்பட்டவர்களான அபூபக்கர் பஜேதாத், அப்துல் ஹமீத் பிஎம், ஏ.எம் ஜலால், ராபின்ஸ் கே ஹமீத், பி.டி அப்து, முகமது ஷாபி, கே. ஹம்ஜத் அலி, பி.டி. அகமது குட்டி, ஹம்ஜாத் அப்துல் சலாம், ஷைஜால், முகமது ஷமீர், ரசல், அன்சில், பி.எஸ் சரித், ஸ்வப்னா சுரேஷ் ஆகியோருக்கு சொந்தமான 30.245 கிலோ தங்கம், 14.82 கோடி ரூபாஇ சொத்துகளை பறிமுதல் செய்துள்ளது. முன்னதாக, அமலாக்கத்துறை கடந்த 23.12.2020ல் ரூ. 1.85 கோடி மதிப்புள்ள அசையும் சொத்துக்களை பறிமுதல் செய்த்து. இதனையடுத்து இவ்வழக்கில் பறிமுதல் செய்யப்பட்ட மொத்த சொத்துகளின் மதிப்பு ரூ. 16.97 கோடியாகும்.

# காங்கிரஸ் ஆதரிக்கும் குழந்தைத் திருமணம்


விஜயபாரதம்

பெண்களுக்கான அதிகாரம் பற்றி காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி பேசிய இரண்டு நாட்களில் காங்கிரஸ் கட்சி ஆளும் ராஜஸ்தானில், குழந்தைகள் திருமணங்களை பதிவு செய்வதற்கான மசோதா நிறைவேற்றப்பட்டது. ராஜஸ்தான் சட்டமன்ற விவகாரத்துறை அமைச்சர் சாந்தி தரிவால், இது குறித்து கூறுகையில், குழந்தைகள் திருமணம் கட்டாயம் பதிவு செய்யப்பட வேண்டும் திருமணத்தை பதிவு செய்த பிறகு திருமணத்தை ஏற்பாடு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார். வாக்களிக்கும் முறையில்தான் இதனை நிறைவேற்ற வேண்டும் என்ற பா.ஜ.கவின் கோரிக்கையை புறக்கணித்து, குரல் வாக்கெடுப்பு மூலம் இம்மசோதாவை காங்கிரஸ் நிறைவேற்றியது. ‘இம்மசோதா காங்கிரசின் இரட்டை மனநிலையை பிரதிபலிக்கிறது. குழந்தைத் திருமணமே தவறு, அது தடுக்கப்பட வேண்டும் எனும்போது, அதை ஏன் பதிவு செய்ய வேண்டும், பிறகு ஏன் சம்பந்தப்பட்டவர்களை தண்டிக்க வேண்டும்? அனைத்து நாடுகளும் குழந்தை திருமணங்களை ஒழிக்க முயற்சிக்கையில், ராஜஸ்தான் அரசு அவற்றை ஊக்குவிக்கிறது. இது அவர்களின் வாக்கு வங்கி அரசியல், ஜாதி பஞ்சாயத்துகளை மகிழ்விக்கும் செயல்’ என ஜோத்பூரில் உள்ள சார்த்தி அறக்கட்டளையின் நிர்வாக இயக்குனர் டாக்டர் கிருதி பாரதி விமர்சித்துள்ளார்.

# ரயிலில் இருந்து செலுத்தப்பட்ட ஏவுகணை

வட கொரியா கடந்த புதன்கிழமை தனது ரயிலில் இருந்து செலுத்தத்தக்க பாலிஸ்டிக் ரக ஏவுகணைகள் இரண்டை ரயிலில் பொருத்தியிருந்த ஏவுகணை செலுத்தும் அமைப்பிலிருந்து கிழக்கு கடலை நோக்கி ஏவி பரிசோதித்தது. இந்த ஏவுகணைகள் 800 கிலோமீட்டர் தூரம் பயணித்து கொரிய தீபகற்பம் மற்றும் ஜப்பான் இடையே உள்ள கடலில் சென்று விழுந்தது. ஆறு மாதங்களாக ஏவுகணை சோதனைகளில் ஈடுபடாமல் இருந்த வடகொரயா கடந்த வாரம் புதிதாக உருவாக்கப்பட்ட இரண்டு ஏவுகணைகளை ஏவி பரிசோதித்து. மீண்டும் ஒரு வார இடைவெளியில் தற்போது இந்த சோதனையை நிகழ்த்தியுள்ளது குறிப்பிடத்தக்கது. இதற்கு ஜப்பானும் தென் கொரியாவும் கண்டனம் தெரிவித்துள்ளன. விஜயபாரதம்



# வீரத்துறவி இராம கோபாலன்



விஜயபாரதம்

வீரத்துறவி இராம கோபாலன் 19.9.1927ல் தஞ்சை மாவட்டம் சீர்காழியில் பிறந்தவர். 1945ல் ஆர்.எஸ்.எஸ் அமைப்பில் இணைந்தார். டிப்ளமோ, ஏ.எம்.ஐ.ஈ. படித்து முடித்த பிறகு மின்சாரத் துறையில் வேலை பார்த்தார். பிறகு அந்த அரசு வேலையை உதறிவிட்டு முழுநேர ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் பிரச்சாரகராக ஆனார். ஆர்.எஸ்.எஸ் இயக்கத்தில் பல்வேறு பொறுப்புகளில் செம்மையாக பணியாற்றினார். மாநில அமைப்பாளர் பொறுப்பில் தமிழகம் முழுவதும் ஆர்.எஸ்.எஸ் இயக்க வேலைகள் வளரக் காரணமாக இருந்தவர்.

1948ல் ஆர்.எஸ்.எஸ் தடை செய்யப்பட்டபோதும், 1975 எமர்ஜென்சி நேரத்திலும் தமிழகத்தில் ஆர்.எஸ்.எஸ் பேரியக்கத்தை உயிர்ப்போடு வழிநடத்தியவர். தமிழகத்தில் நிலவிய அசாதாரண ஹிந்து விரோத சூழ்நிலையை கருத்தில் கொண்டு 1980ம் ஆண்டு ஆர்.எஸ்.எஸ் இயக்கத்தின் வழிகாட்டுதலில் இராம.கோபாலன் உருவாக்கிய இயக்கம் தான் இந்து முன்னணி.

இந்து முன்னணி வளர்ச்சிக்காக இராம கோபாலன் தமிழகம் முழுவதும் சுற்றுப் பயணம் செய்தார். தமிழகத்தில் அவர் கால் படாத ஊர்களே கிடையாது. 1984ல் மதுரை ரயில் நிலையத்தில் இவர் மீது கொடூரத் தாக்குதல் நடைபெற்றது. இதில் இவரது கழுத்திலும் தலையிலும் பலத்த வெட்டு. தழும்பை மறைக்க அன்றிலிருந்து காவித் தொப்பியை அணிய ஆரம்பித்தார்.

ஆனால் இவை எல்லாம் அவரது தேசப் பணியை முடக்கவில்லை. பல மடங்கு உற்சாகத்துடன் இந்து முன்னணி பேரியக்க கிளைகளை விதைத்தார். இன்று தமிழகம் முழுவதும் ஆல்போல் தழைத்து, அருகு போல இந்து முன்னணி வேரோடியிருப்பதற்கு காரணம் கோபால் ஜி தான் என்றால் அது மிகை அல்ல. அவர் வேறு, இயக்கம் வேறு அல்ல. இந்துமுன்னணி தான் கோபால் ஜி; கோபால் ஜி தான் இந்து முன்னணி.

அவரைப் போலவே செயல்திறம் மிக்க, எதிர்பார்ப்பற்ற, தேசபக்தி கொண்ட எண்ணற்ற மாவீரர்களை, தொண்டர்களைக் கொண்ட இயக்கமாக இந்துமுன்னணி வளர்ந்திருக்கிறது. தேசத்திற்காக, தர்மத்திற்காக தனது வாழ்வையே அர்ப்பணமாக்கிக் கொண்டவர் கோபால் ஜி. தனக்கென ஒரு வாழ்க்கை என்ற ஒன்று அவரிடத்தில் இல்லை. இயக்கமே அவரது வீடு. தொண்டர்களே அவரது உறவினர்கள்.

அவரது வாழ்வே நமக்கு பாதை. இயக்கப்பணியே நாம் அவருக்கு செய்யும் வீர அஞ்சலி.